<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.641/2019 பெயர்-சிராஜுதீன் நாள்.04.08.2023

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**4 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடபட்டுள்ளவாறு சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் தவறு. 1 ம் பிரதிவாதி மும்தாஜ்பேகத்திற்கு 1982 ம் வருடத்திலேயே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி மும்தாஜ்பேகம் அவருடைய குடும்பத்துடன்தான் வசித்து வருகிறார் என்றால் தற்சமயம் அவருடன் குடும்பத்துடன் இருக்கிறார், அம்மா இறக்கும்வரை தாவா சொத்தில் உள்ள வீட்டில்தான் குடியிருந்து வந்தார். அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மும்தாஜ்பேகம் தற்சமயம் கிருஷ்ணா தியேட்டர் அருகில் உள்ள வீட்டில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி ஜியாவுதீன் என்னுடைய சகோதரர் என்றால் சரிதான். அவர் டெலிபோன் பவன் அருகில் உள்ள வீட்டில் வசித்து வருகிறார் என்றால் 2016 க்கு பின்னிட்டு மேற்படி வீட்டில் குடியிருந்து வருகிறார். தாவா வீட்டில் அம்மா இறந்ததற்கு பின்னிட்டு யாருமே குடியிருக்கவில்லை. 2 ம் பிரதிவாதி தாவா வீட்டில் இருந்து ஏன் காலிசெய்து போனார் என்றால் அடாவடி செய்து வெளியே போனார். அவ்வாறு பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், என்னுடைய நடவடிக்கைகள் காரணமாகதான் வெளியே சென்றார் என்றாலும் சரியல்ல. எனக்கு எத்தனை வயதில் திருமணம் நடந்தது என்றால் 42 வயதில் திருமணம் நடந்தது. நான் தற்சமயம் வசித்துவரும் வீடு கதவு எண்.31, குப்பன் காத்தான் வீதி என்றால் சரிதான். தாவா சொத்து எந்த வருடம் யாரால் வாங்கப்பட்டது என்றால் அம்மா பெயரில் வாங்கப்பட்டது, எப்போது என்று சரியாக தெரியவில்லை. 12.03.1973 ல் என் தந்தை குத்தூஸ் அவர்களும், முகமது ஹனீபா அவர்களும் சேர்ந்து கிரையம் வாங்கியது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் சித்தப்பா முகமது ஹனீபா அவர்களுக்கு பாதி பாகம் தாவா சொத்தில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது என் சித்தப்பா முகமது ஹனீபா தாவா சொத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட பாகத்தை என்னுடைய அப்பா பெயருக்கு பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது அம்மாவிற்கு எப்படி வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது தந்தை எனது தாயாருக்கு 28.04.1999 ம் தேதி கிரையம் செய்து கொடுத்த வகையில் தாவா

சொத்து என் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றால் இருக்கலாம். மேற்படி கிரைய தொகையை தரும் அளவிற்கு என்னுடைய அம்மாவிற்கு வசதி இல்லை என்றால் கணவன் மனைவிக்குள் எதற்கு தொகை தரவேண்டும். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் ரூ.2,00,000/- என் அம்மா, என் அப்பாவிடம் கொடுத்து கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், என் அம்மா சேர்த்துவைத்த தொகையில் இருந்தும் அவருடைய நகையை விற்றும், கிரைய தொகை கொடுத்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. 12.04.2012 ல் என் தந்தையார் நிர்வகித்து வந்த கூட்டு முயற்சி சங்குமார்க் பீடி நிறுவனத்தை நிர்வகிப்பது சம்மந்தமாக 6 ம் பிரதிவாதி, 1 ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதி ஆகியோர் சரிசமமாக அடையும்படி தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி நிறுவனம் என் தகப்பனார் இறந்தவுடனே கலைக்கப்பட்டுவிட்டது. தாவா சொத்து 1973 ல் கிரையம் பெறப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்டி வீடு எப்போது இடித்து கட்டப்பட்டது என்றால் 1987 ல் இருக்கும். அப்போதிலிருந்து 6 ம் பிரதிவாதி அதில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் தவறு. தாவா சொத்தில் எனக்கும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான். மற்றவர்கள் பயந்துகொண்டு வழக்கு தாக்கல் செய்ய வரவில்லை, அதனால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1 ம் பிரதிவாதி இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தார், 6 ம் பிரதிவாதி அவரது வீட்டிற்கே சென்று மிரட்டிய காரணத்தினால் 1 ம் பிரதிவாதி வழக்கிற்கு வரமறுக்கிறார். நான் போய் 1 முதல் 3 பிரதிவாதிகளை பாகப்பிரிவினைக்காக கேட்டதாகவும், அதற்கு அவர்கள் மறுத்ததாகவும் பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மற்ற பிரதிவாதிகள் என்னுடன் சேர்ந்து பாகம் பிரித்துகொள்ள ஒத்துழைக்காத காரணத்தினால் வழக்கு தாக்கல் செய்ய பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்து தாவா சொத்தை அனுபவிப்பதில் சிக்கல் இருக்கும் காரணத்தினால்தான் மற்ற பிரதிவாதிகள் என்னுடன் ஒத்துவரவில்லை என்றால் சரியல்ல, அவ்வாறு சிக்கல் எதுவும் இல்லை. என் தந்தை 04.01.2013 ல் இறந்தார் என்றால் சரிதான். என் தந்தை இறந்த சமயத்தில் வீட்டில் இருந்து நகை, பணம் மற்றும் பத்திரங்களை 1 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதியின் கணவர் மற்றும் மாமனார் திருடி சென்றதாக 6 ம் பிரதிவாதி ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்சமயம் என்னிடம் காட்டப்படும புகைப்படத்தில் இருப்பது நான்தான். மேற்படி புகைப்படம் ஈரோடு பெரியார் நகரில்

உள்ள ஒரு அரசியல் கட்சி அலுவலகத்தில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் மேற்படி அரசியல் கட்சியின் பெரியார் நகர் பகுதியின் அவை தலைவராக உள்ளேன் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதியும் மேற்படி கட்சியின் உறுப்பினர் என்றால் சரிதான். எனக்கும், அரசியல் செல்வாக்கு உள்ளது என்றால் போன மாதம் 8ம் மாதத்திலிருந்து உள்ளது. அதனால் 6ம் பிரதிவாதி அவரது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி அடாவடியாக செயல்படுகிறார் என்று சொல்லியிருப்பது வழக்கிற்காக பொய்யாக சொல்லியிருப்பது என்றால் சரியல்ல. நான் 6ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வாழ்க்கையும் குணாதிசியங்களையும் குறிப்பிட்டும் பிராதிலும், முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி சதாம்உசேன் 5ம் பிரதிவாதி முகமது சாகுல் அமீது தாவா சொத்தில் குடியிருந்து வருவது எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல, ஆட்சேபணை உண்டு. என்னுடைய தாயார் 2012ம் வருடத்திலேயே எனக்கும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துவிட்டார் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கை 2019 ம் ஆண்டில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2016ம் வருடம் எனது தாயார் இறக்கும்வரை தாவா சொத்தில்தான் நான் இருந்தேன். 7 வருடமாக இந்த வழக்கை தாக்கல் செய்யாததற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் 7 வருடமாக சொத்தை அவர்கள் தரவில்லை, அதனால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். 4ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள வீட்டை 2018ம் வருடத்தில் தனது மகன் திருமணத்திற்காக புதுப்பித்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 18 லட்சம் செலவு செய்து வீட்டை புதுப்பித்தார் என்றாலும், அதற்கு பின்னிட்டுதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் 4ம் பிரதிவாதியின் மீதுள்ள கால்புணர்ச்சியின் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வசித்து வரும் வீடும், தாவா வீடும் எதிரெதிரே உள்ளது என்றால் சற்று தள்ளி உள்ளது. நான் தற்சமயம் சங்கு பீடி நிறுவனத்தில் பங்குதாரராக உள்ளேன். மேற்படி சங்கு பீடி கம்பெனி எங்கு உள்ளது என்றால் கதவு எண்.34 குப்பன் காத்தான் வீதியில் உள்ளது. அப்பா இறந்ததிலிருந்து மேற்படி நிறுவனத்தில் நான் பங்குதாரராக உள்ளேன். 6ம் பிரதிவாதியும் அதில் ஒரு பங்குதாரர் என்றால் சரிதான். மேற்படி சங்கு பீடி நிறுவனத்தில் பொருட்கள் கொள்முதல் செய்வது குறித்ததான கணக்கு வழக்குகளை நான் கடந்த 10 வருடங்களாக ஒழுங்காக சமர்பிப்பது இல்லை என்றால் சரியல்ல. (மேற்படி சங்கதிகள் குறித்து எதிர்வழக்குரையில் சொல்லப்படாத காரணத்தினால் வாதி தரப்பு வழக்கறிஞரால்

மேற்படி கேள்விக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.) 6ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட்படி எந்த உரிமையும் கொடுக்கப்படாத காரணத்தினால் அவர் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாளது தேதி வரை யாரும் வாடகைக்கு இல்லை என்றால் சரிதான், வாடகைக்கு விட்டால் வருவார்கள். அதனால் மேற்படி வாடகை சம்மந்தமான பரிகாரம் 6ம் பிரதிவாதியின் மீது நான் கேட்டுள்ளது நிலைக்கதக்கது என்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வராதபட்சத்தில் 6ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 2/8 பாகம் உள்ளது என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் பத்திரப்படி 4,5 பிரதிவாதிகளுக்கு சேர்த்து தாவா சொத்தில் 1/5 பாகம் வழங்குவதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை.

**6ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

6ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.